

தி இண்டஸ்டிரியல் லேபர் வெல்பேர் அசோஸியேஷன் லிட்.,
அவனாசி சாலை, கோயமுத்தூர் - 18.

புற்றுநோய் பற்றிய விளக்கமும் சித்த ஆராய்ச்சிமருந்துகளும்

ஆக்கியோன் :
டாக்டர் எம். சண்முகவேலு, எச். பி. ஐ. எம்.,
முன்னாள் பேராசிரியர்,
அரசினர் இந்திய இணைப்பு மருத்துவக்கல்லூரி, சென்னை
தற்சமயம்: சித்த ஆராய்ச்சியாளர்,
சித்த ஆராய்ச்சி நிலையம் (ILWA. Ltd.), கோயமுத்தூர்.



Dr. G. D. NAIDU



Dr. M. Shanmugavelu, H. P. I. M.

Blank page counted

தி இண்டஸ்டிரியல் லேபர் வெல்பேர் அசோஸியேஷன் லிட்.,
அவனாசி சாலை, கோயமுத்தூர் - 18.

புற்றுநோய் பற்றிய விளக்கமும் சித்த ஆராய்ச்சி மருந்துகளும்

ஆக்கியோன் :
டாக்டர் எம். சண்முகவேலு, எச். பி. ஐ. எம்.,
முன்னாள் பேராசிரியர்,
அரசினர் இந்திய இணைப்பு மருத்துவக் கல்லூரி, சென்னை
தற்சமயம்: சித்த ஆராய்ச்சியாளர்,
சித்த ஆராய்ச்சி நிலையம் (ILWA. Ltd.), கோயமுத்தூர்.

Blank page counted

"புற்றுநோய்" (CANCER)

வேறு பெயர்கள்: *இதனை, புற்றம், புத்து, வன்மீகம், வளை, நாகு, புரை வைத்த புண் எனக் கூறுவர்,*

இயல்: *பூமியில் கறையான் புற்று எங்ஙனம் உண்டாகி வளர்ச்சியடைகிறதோ அதேபோன்று தேகத்தின் கண் எப்பகுதியிலாயினும் கொடியதோர் புறப்பாடு அல்லது புண் உண்டாகி வளர்ந்து பலவாறு கப்பரவி அரிப்பு, எரிச்சல், வலி, கெட்ட தசை, அழுகல், கெட்ட நீர் கசிதல் முதலிய குறிகுணங்களுடன் சிகிச்சைக்கு வசப்படாத நோயாகும்.*

For us it is more than an ulcer, or a tumour chronic, malignant and troublesome ailment Modern researches have defined that cancer is an unlimited and undisciplined cell growth in any organ of the body, encroaching and invading upon other normal cells and interfering with their functions, finally causing destruction of the normal cell or in other words it is a normal growth "Gone Wrong"

நோய்வரும் வழி: *புற்று நோயுண்டாவதற்கு சரியான காரணம் எந்த நூல்களிலும் காணவில்லை. அகத்தியர் பெருநூல் "கன்ம காண்டத்தில்" இந்*

நோய்பற்றி விரிவாகக் கூறப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆனால், அந்நூல் பதிப்பிலில்லை. எட்டுப் பிரதிகளும் நமக்குக் கிடைக்கவில்லை. இதனைக் கன்ம நோய் என்றும் தீரா நோய் என்றும் அல்லது தீருவது அரிது என்றும் அறிகிறோம். இந்நோய் உண்டாவதற்குரிய அசல் காரணம் தெரியாவிடினும் அனுபவத்திற்கண்ட சில உண்மையை வைத்து (Contributory Causes) சில நூல்கள் சிற்சில காரணங்களைக் கூறுகின்றன பெரும்பாலும் வாயிலுண்டாம் புற்று (Epithelioma) புகையிலை சுண்ணம்பு இவை உபயோகிப்பதாலும், புகை குடிப்பதாலும், பொருத்தமற்ற பொய்ப்பல் உபயோகிப்பதாலும் உண்டாகும். புகை அதிகம் பிடிப்பதால் நுரையீரல், குரல்வளை இவற்றில் புற்றுண்டாகும். சருமத்திலுண்டாம் புற்று நாள்பட்ட காயத்தாலுண்டாகக்கூடும் (Thermal, Chemical and Machanical Injuries). அன்றியும் வெப்பமிகுதியாலும், தோலின் அசுத்தத்தாலும், ஆடைகளை இறுக்கமாக அணிவதாலும் உண்டாகலாம், அரிசியை மிகுதியாக உணவில் அருந்துபவர்கள் அரிசியின் புரதச்சத்துவைப் போக்கியுண்பதாலும், சாராயம், பிராந்தி முதலியவற்றை அதிகமாகக் குடிப்பவர்களுக்கும் இரைப்பை ஈரல், குடல் இவற்றில் புற்று உண்டாகலாம். ஆண்குறியின் முன்தோலில் (Prepuce) உண்டாம்புண் (Phimosis) காரணமாகப் புற்று உண்டாகலாம். அதிகமாகச் குடிப்பவர்களுக்கும், போகம் உள்ளவர்களுக்கும் நீர்குண்டிக்காயிலும் ஜனனேந்திரியங்களிலும் புற்றுநோய் தாக்கலாம். பெண்களின் மார்பகத்திலும் கருப்பையைச் சேர்ந்த உறுப்புகளிலும் உண்டாகும் புற்றுநோய் அப்பாகங்களின் அசுத்தத்தினாலும், வெள்ளை, வெட்டை நோய் நீடித்திருப்பதாலும் அவ்விடங்களில் காயம்

ஏற்படுவதாலும் உண்டாகக்கூடும். மிகு காரமும் மிகு வாசனையுமுள்ள பொருள்களை (Highly Spiced food) அதிகமாக உண்பதால் உட்கருவிகள் இந்த நோய்க்கு இரையாகக்கூடும். அன்றியும் பூச்சிகடி, விடக்கிருமிகள் இவற்றினால் விடமித்துப்புண் உண்டாகி நீண்ட காலம் ஆறாமல் புற்றுநோயாக மாறவுங்கூடும். குருதிப்புற்று, எலும்புப்புற்று இவைகள் உண்டாவதற்கு சரியான காரணம் தெரியாவிடினும் எக்ஸ் கதிர்களும், ரேடியமும் இம்மாதிரிப் புற்றுநோயைத் தோற்றுவிக்கிறதென்றும், அதே ரேடியமும் எக்ஸ் கதிர்களைக்கொண்டும் இக்காலத்தில் புற்றுநோயுள்ளயிடத்தைச் சுட்டுக் குணப்படுத்த முயற்சிக்கிறார்களென்றும் நவீன நூல்கள் கூறுகின்றன. நிற்க, புற்றுநோயுண்டாவதற்கு முக்கிய காரணம் வைரஸ் (Virus) என்ற நுண்ணிய கிருமியே எனவும் கூறியுள்ளார். ஆகச் சேர்ந்து புற்றுநோய்ப் பிரச்சினை மிகவும் மகத்தானதென்றும், வைரஸ்வே (Virus) இதற்குக் காரணமென்றும், இதனைத் தீர்ப்பது அவ்வளவு எளிதல்லவென்றும் உலகம் பூராவும் கருதுகின்றனர்.

குறிகுணங்கள் :

ஆரம்பத்தில் வலியில்லாத வீக்கம் அல்லது கட்டி அல்லது புண் உண்டாகலாம். நாளடைவில் பெருத்துத் தடித்து வளரக்கூடும். வலி சிறிது சிறிதாக ஏற்படக்கூடும். புண் ஆறுவதில்லை. இதில் சிறிது சுரண்டி எடுத்து நவீன முறையில் (Biopsy) என்னும் சோதனைமூலம் உறுதியான புற்றுநோயைத் தெரிந்து கொள்ளலாம். உடலில் எப்பாகத்தை புற்றுநோய் தாக்குகிறதோ அந்த உறுப்பும் அதைச் சார்ந்த மற்ற உறுப்புகளும் வெகுவாகப் பாதிக்கும். நாட்கள் செல்லச் செல்ல வலியும் மற்ற உபாதை

களும் அதிகமாகி அன்னபானாதிகள் உட்கொள்ள இயலாது. உடல் வற்றி உள்ளம் குன்றி தூக்கமின்மை, ஆயாசம், பசி பட்டினி களைப்பு இவற்றால் பீடிக்கப்பட்டு மரணமும் சம்பவிக்கும். புற்றுநோய் ஒரு தொத்துநோயல்லவென்றும், பசி, பட்டினி (Malnutrition) சுகாதாரக்குறைவு (Insanitation) ஆகிய இவற்றால் ஏற்படக்கூடியது அல்லவென்றும் நூல்கள் கூறுகின்றன. ஆதலால் இதனை சித்தர்கள் "கன்மநோய்" என்று கூறுவது பொருத்தமாகும். பொதுவாக புற்றுநோய் 30 வயதுக்குமேல்தான் உண்டாகுமெனினும், அனுபவத்தில் குறைந்த வயதினருக்கும் புற்றுநோயுண்டாவதைப் பார்க்கலாம்.

நோய்கணிக்கும் சில குறிகுணங்கள் :

புற்றுநோயை அறியவேண்டுமானால் கீழ்க்காணும் ஏழு முக்கிய குறிப்புகளைக் கவனிக்க வேண்டும். (Seven cardinal points):

1. உடலில் எங்கேயேனும் ஆறாத புண் இருந்தால் (Any sore that does not heal within a reasonable time)

2. வலி ஒன்றுமில்லாத வீக்கம் அல்லது தடிப்பு, பெண்களின் முலை அல்லது வேறுபாகங்களில் நாள்படயிருக்குமானால் (A painless lump or thickening in the breast or elsewhere in the Body)

3. இயற்கையாகவுள்ள நவத்துவாரங்களிலிருந்து இயற்கைக்கு மாறாகக் குருதி அல்லது கெட்ட நீர், சீழ் இவை வெளியாகிக் கொண்டிருந்தால் (Unusual Bleeding or discharge from a natural body - opening.)

4. ஏதேனும் பருக்கள், ஆணி, மச்சம் இவற்றின் நிறம் மாறுபட்டு கனத்திலும் பெரிதாகிக் கொண்டுவந்தால் (Progressive change in colour and size of a wart or mole)

5. குரற்கம்மல், இருமல் இவை அதிக நாட்களுக்கு நீங்காதிருந்தால் (Persistent hoarseness or cough)

6. எதையும் விழுங்கமுடியாமை அல்லது செரியாமை இவை நாட்படயிருந்து கொண்டிருந்தால் (Persistent indigestion or difficulty in swallowing)

7. சிறுகுடல் பெருங்குடல் இவற்றில் தொழில் வேறுபாடுயிருந்தால் (Any change in bowel habits)

முக்குற்ற வேறுபாடுகள் :

வளி, அழல், ஐயம் என்னும் முக்குற்றங்களின் கேட்டால் இந்த நோய் உண்டாகும். ஆரம்பத்தில் உடலில் உணவாதி செயல்களால் வெப்பம் அதிகப் பட்ட நிலையில் அழல் குற்றம் மிகுந்து அச்சமயம் ஐயப்பொருள்களை மிகுதியாக உண்பதாலும், சதுப்புள்ள நிலங்களில் வசிப்பதாலும் அழலையம் மிகுந்து கட்டியைத் தோற்றுவிக்கும். இதனைப் புறப்பாடு என்றும் கூறுவார் அத்துடன் வளிக்குற்றமும் கேடடைந்து முக்குற்ற பிணியாகி வாயுக்களின் தொழில் குன்றி புற்றுநோய் போன்ற தர்மாமிசத்தை வளர்க்கும். தேகத்தின் வெளிப் பாகங்களிலும் உள் உறுப்புகளிலும் சப்ததாதுக் களில் எங்கேயேனும் நோயைத் தோற்றிவிக்கும். மிகுந்த சூடு, அரிப்பு, தடிப்பு, வீக்கம், வலி, குருதி

வடிதல், துர்நீர் வடிதல், மிகுந்த தாபிதம், புண் இவற்றை உண்டாக்கி அண்டையிலுள்ள நெறி முதலிய மற்ற உறுப்புகளுக்கும் தொடரும் (Metastasis). அன்றியும் உடம்பில் பற்பல துன்பங்களையும் விளைவிக்கும்.

தீரும்தீராத நோய்க் குறிகுணங்கள் :

ஆரம்பத்தில் புற்றுநோய் தடித்து சிவந்து வலியுடன் கூடிய புறப்பாடாகக் கெட்டியாயிருக்கும். சிறிய மணிகள் போல அணுக்கள் காணும். இவற்றைப் புற்று அறைகளென்பர். அதில்னின்றும் நீர் கசியும். இதனைப் புற்றுநீர் என்பர். நாட்கள் சென்றால் தோலும் சவ்வும் அதிகம் புண்ணாகி அழுகல் ஆரம்பிக்கும். அச்சமயம் நீர் மிகுதியாகக் கசியும். பிறகு புற்று வெளிப்பட ஆரம்பிக்கும். புண்ணின் ஓரம் தடித்து சுரசுரப்பாய் கறையான் புற்றுப் போலிருக்கும். விடநீர் வடிந்துகொண்டேயிருக்கும் நாற்றமும், எரிச்சலும், வலியும், அழற்சியும் அதிகமாகும். புண் அதிகரித்து அண்டையிலுள்ள உறுப்புகளையும் தாக்கும் (Metastasis). உடலும், உள்ளமும் வன்மையற்று முடிவில் நோயாளி மரணமாவான். புற்றுநோய் ரத்தநாளங்களிலும் (Angio-sarcoma), எலும்புகளிலும் (Osteo-sarcoma) உண்டாகக்கூடும். இவைகளும் மருத்துவத்தில் தீருவது மிகவும் அரிது.

நிற்க, உடம்பில் எங்கேயேனும் உணவுசத்து பேதகம் ஏற்படுவதாலேயே கட்டிகள் (Tumours) உண்டாகின்றன. இக்கட்டிகளின் திசுக்கள் (Cells) உடலின் திசுக்களுக்கு முற்றிலும் வித்தியாசமாகயிருக்கும். கட்டிகள் பருத்துக்கொண்டே போகும்.

உடைந்தால் புண் உண்டாகும். இது உண்டாகும் உறுப்பு காலக்கிரமத்தில் கேடடைந்து உணர்வற்று, தொழிலற்றுப்போம். இதன்விடம் அண்டையிலுள்ள நெறிகளிலும் உறுப்புகளிலும் வியாபிக்கும். இதனை அறுவை சிகிச்சை செய்தாலும் மீண்டும் மீண்டும் முளைக்கும். இதுவும் தீருவது இல்லை என்றே கூறலாம்.

புற்றுநோய் ஆரம்ப நிலையாகயிருந்தால் நோயின் இடத்தைப்பொருத்தும் (உறுப்புகள்) தேசம், காலம் பலம் இவற்றைப் பொருத்தும் உயர்தர சித்த மருந்துகளால் அயராது சிகிச்சை பெறின் ஒருக்கால் குணமாகலாம்.

பரிகார முறைகள் :

புற்றுநோயில் முக்குற்றங்களும் வாயுக்களும் கேடடைந்திருப்பதால் அவற்றைத் தன்னிலைப் படுத்த சித்த உயர்தர மருந்துகளைக் கையாள வேண்டும். புற்று போன்ற கொடிய நோய்க்கு **"இரசம் போன்ற மருந்தே பிரதானம்."** (Mercury is considered among siddhas as an universal remedy for all diseases). அதனைச் சரியான முறையில் தயாரிப்பதென்றால் **"சித்த வயித்திய முப்பு"**-வைப்பற்றி நன்கு தெரிந்திருக்கவேண்டும். முப்புவின் உதவியின்றி மருந்துகள் தயாரிப்பின், தக்க பலனளிக்காது.

(மேற்கோள்)

"உப்பினைப் பிடித்தால்-
சூதமும் புரைகழன்றுடும்"

"வண்ணானைக்கூட்டாமல் மருந்துமே செய்தால்
வாதிமகனல்ல வல்லமாடுதானே"—

என்பதினாலும்

“ முப்புதொட்டுக்கற்பமுண்டறியாதார்க்கு
எப்போதுங்காலனெமன் ” — என்பதினுலும்

“ சொர்னமதுமுப்பூவால் கைக்குள்ளாச்சு
சோராமல் செய்பவர்க்குச் சித்தியாமே ”
என்பதினுலும்

“ பதிவானமுப்பூவையறியவென்ருல்-
பேரப்பா சொல்லுகிறேன் நன்ருய்க்கேளு
பெருமையுள்ள பிறப்பிறப்பகற்றுமூலி ”—
என்பதினுலும்

“ காடிதனில் கல்லுப்பதின்சுண்ணமும்
போடுங்குன்றிப் பொசித்தவர் மாழ்வரோ ”
என்பதினுலும்

“ உப்பின் கசடதுபோய் ஊறலதுமாறினதால்
முப்புச்சுண்ணமாவதற்கு மூன்றுபேர்-
உப்பதனுல்
கற்பாந்தரங்கோடிகாயமதுவலுத்துச்
செற்பாயும்வாசியினுல்தேகம் ”-என்பதினுலும்

“ பாலானசுண்ணமதைமஞ்சள் தன்னில்
பாய்ச்சினுல் மஞ்சளது சிவந்து போகும்
மேலானசரக்குக்காலனுகும்
மேன்மையுடன் சரக்கனைத்துங்-
கொல்லுந்தானே ”

“ கல்லுக்ளும் முப்பூவால்நீறிப்போகும்
காடெல்லாந்தான்விளையுமூலியாமே ”—
என்பதினுலும்

“ வளமுடனே முப்பூவைக்கண்டபோது
வாகுடனே எமத்துக்குறுதியாச்சு
பழமையுடன் வயித்தியமும் வாதயோகம்
பலிக்குமடா முப்பூவின் மார்க்கத்தாலே ”

"நளபதியுமுப்பூவையுண்டபோது
நரை திரையுமற்றுமல்லோ ராசனுமே"
என்பதினும்

"இயம்புகின்ற பாடாணமெட்டெட்டுந்தான்
என்மகனே சுண்ணமதாயிசைக்குஞ்சுண்ணம்
பயம்பெறவே உபரசங்கள் நூற்றிரண்டுபத்து
பம்பரம்போலாட்டிவைக்கும்-
பரமாஞ்சுண்ணம்
களிம்புறையும் லோகங்களனைத்தும் தம் தம்
களிம்பற்றுப்படிகமதாய்க்காட்டுஞ்சுண்ணம்
செயம்புகழும் மலைமரம் மண்செடி
பூண்டெல்லாம்
செம்பொன்னாய்ச் செய்யும் பரமசிவச்-
சுண்ணமே" – என்பதினும்

"சுண்ணாபில் கடுகில் நாலிலொருபங்கு
சூதமொரு சேரதனில் தூவினக்கால்
அண்ணாந்துபார்த்திருக்கக்கிறுகிறென்று
ஆடியேமதயானை வீறிட்டுச் சாகும்
அங்கபார்ந்துதிரியாதேயந்தச்சூதம்
அணுவளவுமலையளவில் எடுத்துப்போட
விண்ணோந்துமேருவைப்போல்
மாற்றுக்காணும்
வேதைகளின் துரைகோடிவில்லொண்ணாதே"

"விள்ளவேயங்கியுட சூதந்தன்னில்
வெந்தயமவ்வளவெடுத்து ப்பாதிபோட
வெள்ளைநிறப்பால் திரண்டுவுறைந்துநிற்கும்
வெள்ளமுறை மூன்று தினநதின்றுயானல்
கள்ளமன்று தேகந்தான் அருணன்போலாம்
காயசித்தி யோகசித்தி கைக்குள்ளாகும்
எள்ளளவும் பிசகில்லை ஊழிகாலம்,
இறப்பின்றிச் சூதமுண்டிருக்கலாமே" –
என்பதினும்

“முருக்கெல்ல மீசனாப்பு முருக்கேயல்லால்
முற்றுமே மற்றவுபபால் முடியாவாறே”

“முப்பூவுமுடிந்ததப்பா — பாரு பாரு
மூதண்டச்சரக்குகட்குக் கொஞ்சமீய
தப்பிதங்களில்லாமல் நீறிப்போகும்
தடையின்றிச் செய்தறிந்து பார்த்துக்
கொள்ளே” – என்பதினாலும்

“முப்புமுடிந்ததுகாண் –
மூலப்புள்ளி முப்பு முடிந்ததுகாண்”

“சினச்சரக்கறாபத்தினாலுஞ்சுண்ணம்
செந்தூரபற்பமுஞ்செயநீர்திராவகம்
பாணத்தினார்க்குடோரிகட்டுங்களங்கதும்
பார்க்கப்பார்க்கச்சரக்கதீதங்களும்நீறே” –
என்பதினாலும், அறிகிறோம்.

முப்பூவைப்பற்றிய சிறந்த குணங்களைக் கூறினோம். சித்த உயர்தர மருந்துகளை விரைவிலும் சிறந்த குணமுள்ளதாகவும் செய்துமுடிக்க சித்த வயித்தியர்களாகிய நாம் முப்புவைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்து செய்துமுடித்துக் கைவசம் வைத்துக் கொள்ளவேண்டும். சித்த நூல்களில் ரசத்தை (Mercury) முதற்சரக்காகக் கருதியுள்ளார். அதனைத் தயாரிப்பதற்கு முப்புவின் உதவி இன்றியமையாதது. பொதுவாக எல்லா வகை ரச உபரசங்களையும் பற்பச் செந்தூரங்களாக்க முப்புவின் சேர்க்கை மிகவும் முக்கியமானது. ஆனால் முப்புவைத் தயாரிக்க எல்லாராலும் இயலாது. பல நூல்களை ஆராய்ந்தறிந்து அனுபவமுள்ள பண்டிதர்களை அணுகித் தெரிந்துகொள்ளவேணடும். (மேற்கோள்)

"பிண்டமென்ற சவர்க்கார வித்தைதன்னைப்
பேருலகிலாரறியப்போறாரப்பா
கண்டவர்கள் கோடியிலேயொருவருண்டு
கைமுறையாயவர் காட்டிற்குருவுந்தோன்றும்
பண்பாக நின்ற பூரணத்தைக் கண்டாற்
பாலகனே முப்புவும் நன்றாய்த்தோன்றும்
விண்டதில்லை கண்டவர்கள் சொல்லார்
சொல்லார்
விணைகச்சுட்டலைந்து விதி என்பாரே"–

என்பதினால் இதனைக் கற்றுக்கொள்ளுவதிலுள்ள சிரம சாத்தியத்தை உணர்கிறோம்.

இரசமருந்துகளைப் போலவே தாமபிரம், துருசு, வங்கம், திருவங்கம், நாகம், தங்கம், வெள்ளி, முத்து, பவளம், அயம், காந்தம், உருக்கு, வெள்ளைப் பாடாணம், கொடிவேலி, சேராங்கொட்டை இவை போன்றவை புற்றுநோய்க்குப் பரிகாரங்களாகும். இவற்றை சரியான முறையில் தயாரித்து உள்ளும் புறமும் வழங்கும்போது புற்றுநோயின் கொடூரம் அடங்கி நீர், சீழ், ரத்தம் இவை கசிவது நின்று புண்ணும் சருகுபோல் உலர்ந்துபோம். நோயாளியின் மற்ற குறிகுணங்களும் நாளுக்குநாள் குறைந்து உடல் தேறிவரும். உள்ளம் தைரியம், நிம்மதியும் அடையும். மேற்கூறிய மருந்துகள் யாவும் கேடடைந்த முக்குற்றங்களையும் வாயுக்களையும் சமனப்படுத்தி உடல்நிலையை நன்னிலைமையாக்கும். உடலிலுள்ள எந்தவித பிணியும் மேற்கொள்ளாது அடங்கிவிடும். இதுவே சித்த மருத்துவத்தின் சிறப்பும் பெருமையுமாகும். ஆனால் நவீன முறையில் எக்ஸ்ரே, கோபால்டு, ரேடியம், அறுவை முதலிய சிகிச்சை பெற்ற (X-ray, Cobalt, Radium and Surgical treatments) புற்றுநோய்கள் பூரண

குணம் கிடைப்பது இல்லை என்றே சொல்லலாம். அப்பேர்பட்ட நோயினருக்கு புற்றுநோயுள்ளயி டமும் அதன் அருகாமையிலுள்ள நல்ல பாகங்களும் (Diseased part as well as the adjoining healthy tissues) சேதமாகி நோயினர் சக்தியிழந்து வாய்மூலம் மருந்துகள் உணவாதிகள் ஏற்றுக்கொள்ள வழியி லாது தவிக்க நேரிடுகிறது. ஆதலால் நோயின் ஆரம்ப நிலையில் நவீன சிகிச்சைக்குப் போகுமுன்னரே சித்த மருத்துவப் பரிகாரம் கிட்டுமானால் நன்மை பயக்குமென்பது என் கருத்து.

{ Siddha high class of medicines become very valuable in effect by their beneficial therapeutic action of controlling the spread of growths by converting the vitiated doshas or constitutional humours duly corrected and thereby making the soil factor quite healthy for the patient and unsuitable for the organisms, virus or vishams or visha neer whatever it may be that is responsible for the growth to thrive in the system any longer. We tackle not only the virus but also the general constitutional disorders simultaneously. This is the beauty of our siddha medicines as compared with the modern treatments of X-ray - Radium, Cobalt and Surgical methods.} By this method it is likely that the virus may affect any other part of the body remaining latent in it. However Cancer cases must be wise enough to resort to Medical Aid in the early stage before

much damage is caused both locally and constitutionally. Advanced cases of cancer become unfit for any kind of treatment.

கீழ்கண்ட சித்த செய் மருந்துகளை (Prepared Medicines) உபயோகிக்கும்போது பிளவை, புண், புரை, நாடி விரணம் இவை உலர்ந்து ஆறி வருவது போல் புற்றுநோயும் உடலில் எப்பாகத்தைப் பற்றியிருந்தாலும் வீறு தணிந்து உலர்ந்து சுருங்கி ஆறிப்போம். குறிப்பாக :- (1) இரசப் பற்பம், செந்தூரம், சுண்ணம். (2) சாதிலிங்கபற்பம், லிங்கவெள்ளை, லிங்கக்கட்டுச் செந்தூரம், தங்க லிங்கச் செந்தூரம், தங்கலிங்கமெழுகு. (3) சுவர்ண வாலை ரச செந்தூரம் Nos. 1 to 4. (4) சண்டரச பற்பம், செயரச பற்பம். (5) காளமேக நாராயணச் செந்தூரம். (6) திரிகுண சண்டமாருதச் செந்தூரம். (7) மகாநாராயணச் செந்தூரம். (8) நாகரசச் செந்தூரம். (9) பிரமாஸ்திரம் (சவ்வீரக் கட்டுபற்பம்). (10) பூரணசந்திரோதயச் செந்தூரம். (11) வாலைரச மெழுகு (அகத்தியர்). (12) வீரரச மெழுகு. (13) தாம்பிரபற்பம், செந்தூரம், சுண்ணம். (14) நவதாம்பிர பற்பம். (15) சித்த நவலோக கற்பம். (16) துருசுபற்பம், செந்தூரம், சுண்ணம். (17) அக்கினி குமாரி. (18) திருவங்க பற்பம், கருவங்கச் செந்தூரம், வங்கரச குருபற்பம். (19) மகாவானமா மெழுகு. (20) மார்கண்டன் மெழுகு. (21) கனகலிங்க மெழுகு. (22) நந்திமை. (23) இரசகெந்தி மெழுகு. (24) இடிவல்லாதி லேகியம். (25) மகா வல்லாதி லேகியம். (26) கெந்தகபற்பச் செந்தூரம் சுண்ணம். (27) அயவீரச் செந்தூரம், அயக் காந்தச் செந்தூரம், காந்த அயரசச் செந்தூரம்,

அயம்கெந்திச் செந்தூரம், (28) துருசுச் சுண்ணம் [prepared with the Venom of Serpants or Cobra special method] – நல்ல பாம்பின் விடத்தைக் கொண்டு நல்ல நீலநிறமான சாம்பல் படியாத மயில் துத்தத்திற்கு சுருக்கிட்டு ரவியில் வைத்தெடுக்கச் சுண்ணமாகும், இதுவே புற்றுநோய்க்கு மற்றெல்லா மருந்துகளையும்விடச் சிறந்ததெனக் கருதப்படுகிறது) (29) மிருதார்சிங்கி பற்பம், (30) முத்து பற்பம், பவள பற்பம், (31) முப்புசசுண்ணம், (32) அன்ன பேதிச் செந்தூரம் – [வெள்ளை முருக்கம்பூச் சாற்றி லரைத்துப்புடம் போட்டெடுத்தது], (33) படிக வெண்காரபற்பம், சவர்க்கார பற்பம், (34) பொன்னிமிளைச் செந்தூரம், (35) பி. சி. பற்பம் (P. C. Parpam), பி. எஸ். எம். எம். பற்பம் (P. S. M. M. Parpam), (36) திரிபலைச் சூரணம், (37) பறங்கிப்பட்டைப் பதங்கம், சூரணம் கலவை ஆகிய இவை புற்றுநோய்க்கு உதவக்கூடிய செய் மருந்துகளாகும், இவற்றன் பெரும்பாலான முறைகள் சித்த ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த "செய்மருந்து நூலில்" காணலாம், (அச்சுக்கு இனிமேல்தான் வரக்கூடும் — Siddha Research Pharmacopocia). புற்றுநோயுண்டானயிடத்தைப் பொருத்து உள்மருந்து, வெளிமருந்து, புகைகாட்டல் முதலிய பரிகார முறைகளைக் கையாளவேண்டும், மேற்கூறிய மருந்துகள் தவிர பல்வேறு வயித் யர்களிடம் பல்வேறு சித்த மருந்துகள் இருக்கக்கூடும்,

கழிச்சலுண்டாக்க :

சித்தாதி எண்ணெய், ரசத் தைலம், மேகனாத எண்ணெய்; பூர எண்ணெய், தித்திப்பு பேதி மெழுகு, கழற்சி எண்ணெய், வச்சிரகண்டி மாத் திரை, சிவரத்தின குளிகை, அட்ட பைரவம்,

சஞ்சீவி மாத்திரை இவைகளில் ஏதேனுமொன்றை அவசியம்போல் தக்க அளவில் 1 முதல் 3 நாட்கள் காலையில் மட்டும் கொடுக்கலாம் அல்லது தேவையான போது ஒரே வேளை கொடுத்து மலத்தைக் கழிக்கலாம்.

சித்த ஆராய்ச்சி நிலையத்தில் ஏராளமாக புற்று நோய்கள் சிகிச்சைக்கு வந்தன. அவைகளில் கையாண்ட சில ஆராய்ச்சி அனுபவ முறைகளைக் கீழே காணலாம்.

1. Cancer Leper Cure No. 1. (புற்று குட்டம் நிவாரணி நெ. 1.): காளமேக நாராயணச் செந்தூரம், ரச செந்தூரம் நெ 2, மிருதார்சிங்கி பற்பம், நாகசங்கு பற்பம், பவளச்சுண்ணம் நெ. 2, சிருங்கி பற்பம், அயவீரச் செந்தூரம் இவை வகைக்கு ஒரு குன்றி எடை, முப்புச்சுண்ணம் $\frac{1}{2}$ குன்றி எடை இவற்றைக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு இரண்டு குன்றி எடை காலை, மாலை சிறிது பறங்கிச் சூரணம் கலவையும் தேனும் கூட்டிக் கொடுத்துவரக் குணமாகும். குட்டம் என்பது பெரு நோயைக் குறிக்கும்.

2. Cancer Leper Cure No. 2. (புற்று குட்டம் நிவாரணி நெ 2): காளமேக நாராயணச் செந்தூரம், ரச செந்தூரம் நெ. 2, கருவங்கச் செந்தூரம், நாகசங்கு பற்பம், பவளம், சிப்பி பற்பம், சிருங்கி பற்பம், கெந்தக பற்பம் அல்லது செந்தூரம் இவை வகைக்கு இரண்டு குன்றி எடையும், முப்பு சுண்ணம் $\frac{1}{2}$ குன்றி எடையும் முன்போல் கலந்து வைத்துக்கொண்டு காலை, மாலை முன் அளவில் அனுபானத்தில் சாப்பிட்டுவரக் குணமாகும்.

3. Cancer Leper Cure No. 3. (புற்று குட்டம் நிவாரணி நெ. 3): தாம்பிர பற்பம் அல்லது செந்தூரம், திருவங்க பற்பம் நெ. 1, காளமேக நாராயணச் செந்தூரம், ரச செந்தூரம் நெ. 2, பி. எஸ். எம். எம். பற்பம், முத்து பற்பம், அயவீரச் செந்தூரம், தங்கச் செந்தூரம் இவை வகைக்கு 2 குன்றி எடையும், முப்புச் சுண்ணம் ½ குன்றி எடையும் கலந்து வைத்துக்கொண்டு முன்போல் காலை, மாலை சாப்பிட்டு வர இரு நோய்களும் குணமாகும்.

4. Cancer Leper Cure No. 4. (புற்று பெருநோய் நிவாரணி நெ. 4): காளமேக நாராயணச் செந்தூரம், சுவர்ணவாலை ரச செந்தூரம், திருவங்க பற்பம், அயவீரம், தாம்பிர பற்பம், பி. எஸ். எம். எம். பற்பம், கெந்தக பற்பம் இவை வகைக்கு 2 குன்றி எடையும், முப்பு சுண்ணம் ½ குன்றியும் சேர்த்து வைத்துக்கொண்டு முன்போல் சாப்பிட்டுவரக் குணமாகும்.

5. Cancer Leper Cure No. 5. (புற்று பெருநோய் நிவாரணி நெ. 5): தாம்பிரச் செந்தூரம், தங்கச் செந்தூரம், அயக்காந்தச் செந்தூரம் (Special) அன்னபேதிச் செந்தூரம் (Special) இவை வகைக்கு 2 குன்றி எடையும், முப்புசுண்ணம் ½ குன்றியும் கலந்துவைத்துக் கொண்டு முன்போல் கொடுத்துவரக் குணமாகும்.

6. Cancer Leper Cure No. 6. (புற்று பெருநோய் நிவாரணி நெ. 6: இதுவே துருசு பற்பம் (Special process), துருசுச் சுண்ணம் என்றும்

கூறலாம். (Vide Siddha Research Pharmacopoeia) இதில் $\frac{1}{2}$ முதல் ஒரு அரிசி எடை காலை, மாலை தக்க அனுபானத்துடன் கொடுத்துவரக் குண மாகும். 3, 5, 7 நாட்கள் கொடுக்கப் பலனளிக்கும்.

7. Cancer Leper Cure Powder No. 7. (புற்று நிவாரணி நெ. 7): (Dr. M. S. Velu's) தேவாமிர்த ரச பற்பம், காளமேக நாராயணச் செந்தூரம், சுவர்ணவாலைரச செந்தூரம், அக்கினிகுமாரி, கெந்தகச் செந்தூரம், அயவீரச் செந்தூரம், பூரண சந்திரோதயச் செந்தூரம், முத்து பற்பம், நீலகண்ட வாலைரசம், நாக பற்பம் இவை வகைக்கு ஒரு பங்கு. காந்த அயரச செந்தூரம், கருவங்கச் செந்தூரம் இவை வகைக்கு 2 பங்கு. காலானந்த கௌரி ரச கற்பூரம், நவதாம்பிர பற்பம் இவை வகைக்கு $\frac{1}{2}$ பங்கு. முப்பு சுண்ணம் சிறிது சேர்த்து எல்லா வற்றையும் நன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1 முதல் 2 குன்றி எடை எடுத்து காலை, மாலை சிறிது பறங்கிச் சூரணமும் தேனும் கலந்து கொடுத்துவர புற்றுநோய், பெருநோய், கொடிய சரும நோய்களும், புண், புரை, பகந்திரம், கீல்வாயு, பக்கவாதம், குன்மம், சூலை, வலிநோய், பெரு வயிறு, கல்லீரல் விருத்தி முதலியன குணமாகும். ரத்த அழுத்தமும் சாந்தமாகும்.

8 Cancer Cure Pills No. 1. (புற்று நிவாரணி மாத்திரை நெ. 1: மேலே நம்பர் 7-ல் கூறிய 14 வகைப் பற்பச்செந்தூரங்களையும் ஒன்றாய்க் கலந்து இதில் 2 அவுன்சு எடுத்து அத்துடன் பறங் கிச் சூரணம் 2 அவுன்சு, பறங்கிப்பட்டைப் பதங்கம் 5 கிராகனெடை, Ascorbic acid 5 கிராகனெடை, நவனீத பற்பம் 5 கிராகனெடை இவை யாவும்

கல்வத்திலிட்டு திரிபலைக் குடிநீர்விட்டு நன்ருக அரைத்து, குன்றியளவு மாத்திரை உருட்டி உலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டுவர மேற்கூறிய நோய்கள் குணமாகும்.

9. Cancer Cure Pills No. 2 (புற்று நோய் நிவாரணி மாத்திரை நெ. 2):—

1. புற்றுநோய் நிவாரணிப் பொடி
நெ. 7—1½ அவுன்சு
2. Ascorbic acid—1 தோலா
3. பறங்கிச் சூரணம் கலவை—1½ அவுன்சு
4. நவநீத பற்பம் – 1 அவுன்சு
5. காடிக்கார ரசச்சுண்ணம் –
ஒரு கிராகனெடை
6. Dr. M. S. Velu's
தேவாமிர்த ரசபற்பம் ,,
7. காளமேக நாராயணச்
செந்தூரம் ,,
8. சுவர்ணவாலை ரச செந்தூரம் ,,
9. கெந்தகச் செந்தூரம் ,,
10. பிரமாஸ்திரம
(வீரக்கட்டு பற்பம்) ,,
11. காலானந்த கௌரி ரச கற்பூரம் ,,
12. நீலகண்டவாலை ரசம் ,,
13. பறங்கிப்பட்டைப்பதங்கம்
2 கிராகனெடை

இவை அனைத்தும் கல்வத்திலிட்டு முன்போல் திரிபலைக் குடிநீர்விட்டு நன்றாயரைத்து உளுந்தளவு மாத்திரை உருட்டி நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை 1 முதல் 2 மாத்திரை வீதம் கொடுத்து வர மேலே புற்றுநோய் நிவாரணிப்பொடி நெ. 7-ல் கூறிய பிணிகள் யாவும் தீரும். **பத்தியம்:–** உப்பு, புளி, புகை நீக்கவும், நோயின் வன்மை நோயாளியின் நிலை அறிந்து பத்தியம் வைத்தல் நலம்.

குறிப்பு: திரிபலைக் குடிநீர் தயாரிக்கும் விதம்:-

திரிபலைப்பொடி 8 அவுன்சு எடுத்து பானையி லிட்டு நீர் பக்கா 4 படி விட்டுக் காய்ச்சி நாலிலொன் றாய் வற்றவைத்து வடிகட்டி வைத்துக் கொணடு இக்குடிநீரைக் கொண்டு மேற்கூறிய மாத்திரைகளை அரைக்க உபயோகிக்கவும்.

10. Cancer Cure Pills No. 3 (புற்றுநோய் நிவாரணி மாத்திரை நெ. 3) :-

1.	Dr. M. S. Velu's தேவாமிர்த ரசபற்பம்	1	தோலா
2.	காளமேக நாராயணச் செந்தூரம்	1	,,
3.	சுவர்ணவாலை ரசச் செந்தூரம்	1	,,
4.	அக்கினிகுமாரிச் செந்தூரம்	1	,,
5.	கெந்தகச் செந்தூரம்	1	,,
6.	அயவீரச் செந்தூரம்	1	,,
7.	காந்த அயாசச் செந்தூரம்	1	,,
8.	முத்து பற்பம்	1	,,
9.	காலானந்த கௌரி ரசம்	½	,,
10.	நீலகண்டவாலை ரசம்	½	,,

11.	தாம்பிர பற்பம்	½	தோலா
12.	பிரமாஸ்திரம் (வீரக்கட்டு பற்பம்)	½	,,
13.	பூபதிச் செந்தூரம்	½	,,
14.	மேக ஊறல் செந்தூரம்	½	,,
15.	சுயமக்கினிச் செந்தூரம் (Special)	½	,,
16.	Aurocalcium (our special process) (சுவர்ண பவளப்)	½	,,
17.	சர்ப்பராசக் குளிகை (Powdered)	½	,,
18.	காடிக்கார ரசச் சுண்ணம்	½	,,
19.	நாக பற்பம்	1	,,
20.	பூரண சந்திரோதயச் செந்தூரம்	1	,,
21.	கருவங்கச் செந்தூரம்	1	,,
22.	பறங்கிப்பட்டைப் பதங்சம்	1	,,
23.	வாய்ப்புண் மருந்து நெ. 2 (Stomatitis Cure No. 2)	1	,,
24.	P. S. S. M. M. பற்பம்	1	,,
25.	அன்னபேதிச் செந்தூரம் (Special)	1	,,
26.	Ascorbic acid	1	,,
27.	நெல்லிக்காய் சத்து (Nellikoi Juice powder)	1	,,
28.	பொன்னிமிளைச் செந்தூரம்	1	,,
29.	நற்பவள பற்பம்	1	,,
30.	கெந்தக பற்பம்	1	,,
31.	சவர்க்காரச் சுண்ணம்	1	,,

32. மிருதார்சிங்கி பற்பம் 1 தோலா
33. அயத்தங்கச் செந்தூரம் 1 ,,
34. கஸ்தூரி செந்தூரம் 1 ,,
35. முப்பு குரு சுண்ணம் ¼ ,,
36. பறங்கிச் சூரணம் கலவை 2 ,,

இவையவும் கல்வத்தில் ஒன்ருய்க் கலந்து திரிபலைக் குடிநீர் விட்டு நன்ருய் அரைத்து உளுந்தளவு மாத்திரைகள் உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுத்துவர புற்றுநோய் உள்ளும், புறமும் ஏற்பட்டிருந்தாலும் குணமாகும். அன்றியும் புற்று நோய் நிவாரணி நெ. 7-ல் கூறிய மற்றெல்லா நோய் களுக்கும் ஏற்ற மருந்தெனத் தெரிந்துகொள்ளவும். [For the preparation of all the above Individual Siddha Medicines please refer to our Siddha Research Pharmacopocia.]

11. Cancer Cure Powder No. 8. (புற்று நோய் நிவாரணிப் பொடி நெ. 8):

1. நீலகண்டவால ரசம் (Modified)
2. காளமேக நாராயணச் செந்தூரம்
3. படிகாரச் செந்தூரம்
4. சுவர்ணவாலை ரசச் செந்தூரம்
5. கெந்தக பற்பம் அல்லது செந்தூரம்
6. அன்னபேதிச் செந்தூரம் (Special)
7. வாலைரசச் செந்தூரம் நெ. 4.

இவை வகைக்கு ஒரு பங்கு

8. பவளம் சிப்பி பற்பம் (P. C. Parpam) 2 பங்கு

9. பூரண சந்திரோதயச் செந்தூரம் ஒரு பங்கு

10. Epithelioma Cure powder No. 3 (வாய்ப்புண் புற்று கலவை நெ. 3) 4 பங்கு

11. இலிங்கக் கட்டுச் செந்தூரம் ஒரு பங்கு

இவையாவையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு 1 முதல் 2 சிற்றிகை வீதம் காலை, மாலை பசு வெண்ணெயில் குழைத்துக் கொடுக்க புற்றுநோய் வாய், தொண்டை, வயிறு, குடல் இவற்றில் எப்பாகத்தைத் தாக்கியிருந்தாலும் குணமாகும்.

12 Stomatitis Cure No. 1 or Eprithelioma Cure No. 1 (அக்கரம் (வாய்ப்புண்) நிவாரணி அல்லது வாய்ப்புற்றுநோய் நிவாரணி நெ. 1) :-

சுத்திசெய்த படிகாரம், வெண்காரம் சம எடை எடுத்துப் பொடித்து பசுவெண்ணெய் சேர்த்து நன்றாயரைத்து ஒரு குடுவையில் பாதியளவு பிடிக்கக் கூடியதாக அடைத்து சில்லுமூடிச் சீலைமண் செய்து புடமிட்டு எடுத்துப் பொடித்து வைத்துக்கொண்டு- இதில் ஒரு பங்கு "படிக வெண்கார பற்பம்" எடுத்து அதன் எடைக்கு குங்கிலியச் சூரணம் (பற்பம்) சவர்க்காரச் சுண்ணம், நெல்லிக்காய் சத்துபொடி (Nelli-koi Juice powder) இவற்றைச் சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டு - வேளைக்கு 2 முதல் 4 குன்றி எடை சிறிது பசுவெண்ணெயில் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வரவும். அதே சமயம் கீழ்கண்ட குடிநீரையும் வாய் கொப்பளித்துவர வாய், தொண்டை இவற்றிலுண்டாம் புண், புற்று இவை குணமாகும்.

13. Gorgle churnam No. 1 (வாய் கொப் புளிக்கக் குடிநீர்ப் பொடி):— கருவேல மரப் பட்டைப் பொடி ஒரு பங்கு (ஒரு பவுண்டு), களிப் பாக்கு, காசுக்கட்டி, மாசிக்காய், படிகாரம் இவை வகைக்கு 1/8 பங்கு (2 அவுன்சு), திரிபலைப் பொடி ½ பங்கு (8 அவுன்சு) இவற்றை ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு — இதில் 4 அவுன்சு கலவைப் பொடியை ஒரு சட்டியிலிட்டு 4 (பக்கா) படி நீர்விட்டு காய்ச்சி நாலிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி அடிக்கடி வாய் கொப்பளித்துவர வாய்ப்புண், வாய்ப் புற்று தொண்டைப்புற்று, இரசவீறு இவை சுண மாகும்.

14. Stomatitis Cure No. 2 or Epithelioma Cure No. 2 (வாய்ப்புண் புற்று நிவாரணி நெ. 2):—

1. படிக வெண்கார பற்பம், படிகார பற்பம். நவநீத பற்பம் இவற்றிலே தேனுமொன்றை எடுத்து கொள்க. 2. குங்கிலிய பற்பம். 3. சவர்க்கார பற்பம். 4. நெல்லிக்காய் சத்து (Nellikoi Juice powder). 5. திரிபலைப் பொடி. இவை வகைக்கு சம எடை எடுத்துக் கலந்து வைத்துக்கொண்டு 2 முதல் 4 குன்றி எடை காலை, மாலை பசுவெண்ணெயில் குழைத்துக் கொடுக்க வாய்ப்புண், புற்று, தொண்டை வயிறு, குடல் இவற்றிலுண்டாம் புண்ணும் போம். புற்று நோயும் போம்.

15. Stomatitis Cure No. 3 or Epithelioma Cure No. 3. (வாய்ப்புண் புற்று நிவாரணி நெ. 3) :—

1. அன்னபேதிச்செந்தூரம் நெ. 3 அல்லது நெ. 4 — ஒரு பங்கு
2. மான்கொம்பு பற்பம் — 2 பங்கு

3. படிக வெண்கார பற்பம், நவநீத பற்பம், படிகார பற்பம் இவற்றுள் ஏதேனுமொன்று – ஒரு பங்கு

4. சவர்க்கார பற்பம் – ஒரு பங்கு

5 நெல்லிக்காய் சத்து (Nellikoi Juice powder) – ஒரு பங்கு

6. திரிபலைப் பொடி – 4 பங்கு.

இவற்றை ஒன்ருய்க் கலந்து வைத்துக்கொண்டு முன்போல வெண்ணெயில் காலை, மாலை கொடுத்துவர மேற்கூறிய நோய்கள் குணமாகும்.

குறிப்பு :- வாய் கொப்புளிக்கும் குடிநீரை அடிக்கடி உபயோகிக்கவேண்டும்.

16. Stomatitis Cure No. 4 or Epithelioma Cure No. 4. (வாய்ப்புண் புற்று நிவாரணி நெ. 4) :–

1. Stomatitis Cure No. 2 or No. 3 (வாய் புண் புற்று நிவாரணி நெ. 2 அல்லது நெ. 3) – ஒரு பங்கு

2. P. S. S. Parpam (பி. எஸ். எஸ். பற்பம்) – ஒரு பங்கு

3. அன்னபேதிச் செந்தூரம் நெ. 3 அல்லது நெ. 4 – ஒரு பங்கு

4. அயச் செந்தூரம், காந்த அயரசச் செந்தூரம், அயத்தங்கச் செந்தூரம் ஏதேனுமொன்று – ஒரு பங்கு

5. Ascorbic acid – ஒரு பங்கு

6. நெல்லிக்காய் சத்து (Nellikoi Juice powder) – 2 பங்கு

இவற்றைக் கலந்துவைத்துக் கொண்டு முன் போல் பசு வெண்ணெயில் காலை, மாலை கொடுத்து வரவும். வாய் கொப்பளிக்கும் குடிநீரையும் உபயோகிக்கவும். மேற்கூறிய புற்றுநோய்கள் குணமாகும்.

17. Stomatitis Cure No. 5 or Epithelioma Cure No. 5. (வாய்ப்புண் புற்று நிவாரணி நெ. 5) :-

1. வாய்ப்புண் புற்று நிவாரணி நெ. 2 அல்லது நெ. 3 – (Stomatitis Cure No. 2 or No. 3) – 4 பங்கு

2. கற்பூர சிலாசத்து பற்பம் நெ. 1 – 2 பங்கு

3. சதசஞ்சிவீனி பற்பம் அல்லது கெருடப் பச்சையிலை பற்பம் – ஒரு பங்கு

இவற்றை ஒன்றாய் கலந்து வைத்துக்கொண்டு 2 முதல் 4 சிற்றிகையளவு காலை, மாலை பசு வெண்ணெயில் குழைத்துக்கொடுத்துவர வாய், தொண்டை, வயிறு, குடல், கல்லீரல் இவற்றிலுண்டாம் புற்று நோய், புண் இவை போம்.

18. புற்றுநோய்தீர சதசஞ்சீவினி பற்பம் :

மலைப்பிரதேசங்களிலிருந்து வேண்டிய மட்டும் சதசஞ்சீவினி என்னும் மூலிகை சமூலமாகக்கொண்டு வந்து நிழலிலுலர்த்தி எரித்து சாம்பலெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாய் அரைத்து வில்லை தட்டி அகலிலடக்கி மூடியிட்டு சீலை மண் செய்து உலர்த்தி கனபுடம் போட்டெடுக்கச்

ஒறிது கருமை கலந்த பற்பமாகயிருக்கும். இதனை மீண்டும் குமரிச்சாறு விட்டரைத்து வில்லை தட்டி முன்போல் புடம்போட்டெடுக்க நல்ல வெள்ளை நிறம் அல்லது சந்தனம் போன்ற நிறமாகவுமிருக்கக்கூடும். இதனை 1 முதல் 2 சிற்றிகையளவு காலை, மாலை பசு வெண்ணெயில் குழைத்துக் கொடுக்க புற்றுநோய்கள் குணமாகும். இதனை தனியாகவும் அல்லது மற்ற புற்றுநோய் நிவாரணி மருந்துகளுடன் சேர்த்தும் கொடுத்து வரலாம். புற்றுநோய் உள்ளும், புறவும் இருந்தாலும் குணமாகும். (அனுபவமுறை)

குறிப்பு:- இதேபோல் கொருடப்பச்சை என்ற மூலிகையையும் பற்பம் செய்து உபயோகிக்க புற்றுநோய் குணமாகும். பெரும்பாலும் இவ்விரு மூலிகைகளும் ஓரேமாதிரியாகத் தோற்றமளிக்கிறது.

19. எலுமிச்சம்பழத்தோல் பற்பம்:- (வாய், தொண்டை, வயிறு, குடல் இவற்றிலுண்டாம் புற்று நோய்க்கு ஏற்ற மருந்து)

நன்றாய்ப் பழுத்த எலுமிச்சம்பழங்களின் தோல்களைச் சேகரித்து ரவியிலுலர்த்தி எரித்துச் சாம்பலாக்கி, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாயரைத்து வில்லை தட்டி அகலிலடக்கி மூடிச் சீலைமண் செய்து கனபுடம் போட்டெடுக்கவும். நிறமும் பற்பத்தின் மிருதுவும் சரியாகயிருந்தால் உபயோகிக்கலாம் இல்லையானல் இரும்புச் சட்டியிலிட்டு 6 மணி நேரம் காடாக்கினியில் வறுத்தெடுக்க நல்ல வெண்மையான பற்பமாகும். இதில் 2 முதல் 3 சிற்றிகையளவு காலை, மாலை பசு வெண்ணெயில் அல்லது தேனில் அல்லது வேறு தக்க அனுபானங்களில் கொடுத்துவர மேற்கூறிய புற்றுநோய்கள் குணமாகும். தனியாகவும் கொடுக்கலாம் மற்ற புற்று

நோய் நிவாரணி மருந்துகளுடன் கலந்தும் கொடுக்கலாம். அன்றியும் பசியின்மை, அருசி, வாந்தி, குமட்டல், தாகம், விக்கல், நாவறட்சி, ஒக்காளம், ஏப்பம், வயிற்று வலி முதலியவையும் குணமாகும். (அனுபவமுறை).

20. **கெந்தக சுடர்த் தைலம்:** (எல்லா வகை சரும நோய்களும், மதுமேகம், பெருநோய், குன்மம், புற்றுநோய் முதலியன தீருவதற்கு):-

1. நன்றாய்ச் சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் – 15 தோலா
2. நவாச்சாரம் – ஒரு தோலா
3. சுத்தித்தசவ்வீரம் – ஒரு காசு எடை (20 கிரெயின்)
4. வெடியுப்பு – $\frac{3}{4}$ தோலா
5. சுத்தித்த தாளகம் – 3 காசு எடை (60 கிரெயின்)
6. சுத்தித்த மனோசிலை – 3 காசு எடை (60 கிரெயின்)
7. பசு நெய் – தேவையான அளவு ($\frac{1}{4}$ லிட்டர்)

இவற்றைக் கல்வத்தில் முறைப்படி பொடித்து ஒன்றாய்ச் சேர்த்து நெய் சிறுகச்சிறுக விட்டு சாந்து போலரைத்து ஒரு வெள்ளைத் துணியில் தடவி திரியாகச் சுருட்டி விளக்கெண்ணெய் விளக்கில் கொழுத்தி முறைப்படி சுடர்த்தைலம் வாங்கவும். இதனை மறுமுறையும் அதே திரியில் எரியவிட்டு சுடர் தைலம் திரும்பவும் வாங்கிக் கொள்ளவும். இவ்வாறு இரு முறை வாங்கிய சுடர்த்தைலம் நன்மை பயக்கும். இதில் 5 முதல் 10 துளி வீதம் சிறிது சர்க்கரை

அல்லது சீனி கற்கண்டு தூள் கலந்து காலை, மாலை 5, 10, 15 தினங்களுக்குக் கொடுத்துவர மேற்கூறிய பிணிகள் தீரும். (அனுபவமுறை).

21. **துவர் எண்ணெய்** (மேல் உபயோகத்திற்கு மட்டும்).

1. மிருதார்சிங்கி. (சுத்தித்தது)
2. ரச கற்பூரம். ,,
3. துருசு. (மயில்துத்தம்)
4. கத்தக்காம்பு. (வெள்ளைக்காசுக் கட்டி)

இவை வகைக்கு 2 அவுன்சுவீதம் எடுத்துக் கல்வத்தில் பொடித்து, தேங்காயெண்ணெய் 40 பலம் (ஒரு வீசை) வரைக்கும் சிறிது சிறிதாக விட்டு நன்றாயரைத்து ஒரு புட்டியிலடைத்து மூன்று நாட்கள் கடும் வெயிலில் வைத்தெடுத்து மேல்பூச்சாக (பிரஷ்ஷால் – Brush or Cotton Swab) தொட்டுப் போட்டுவர புற்று சம்பந்தப்பட்ட வெளிப்புண், சொறி, சிரங்கு, படை, புண்புரை, கரப்பான், கால் கடுவன், மண்டைக் கடுவன் இவை குணமாகும். (Seborrhic Dermatitis).

22. **துவர்க்களிம்பு**: கடுக்காயத் தோல், நெல்லி வற்றல், தான்றிக்காய்த் தோல், காசுக்கட்டி இவற்றின் சூரணம் சம எடை சேர்த்து கல்வத்தில் ஒன்றாய்க் கலந்து போதுமான அளவு தேங்காயெண்ணெய் சிறுகச் சிறுக விட்டு நன்றாயரைத்து களிம்பு பதத்தில் வழித்துவைத்துக்கொண்டு நாட்பட்ட ஆறாத புண், புற்றுவினால் ஏற்பட்ட புண் இவற்றிற்கு சீலையில் தடவிப் (Sterilized Gauge) போட்டு பட்டி கட்டி வரவும், எல்லா வகை புண்களும் ஆறிப்போம்.

23. புற்றுநோய், மேகரணங்கள், கண்டமாலை, பீனிசங்கள் *இவை தீரப்புகை (அகத்தியர்)* :—

சுத்தித்த ரசகற்பூரம், ரசச்செந்தூரம் இவை வகைக்கு ஒரு விராகனெடை, தேன்மெழுகு பலம் $\frac{1}{4}$ அல்லது $1\frac{1}{2}$ தோலா.

இரும்புக் கரண்டியில் மெழுகை உருக்கிக் கொண்டு பூரம், ரச செந்தூரம் இரண்டையும் நன்றாய்த் தூள் செய்து உருக்கிய மெழுகில் போட்டு இறக்கி வெள்ளைத் துணியில் ஊற்றி 5 திரி செய்து நோயாளியை காற்று அதிகமில்லாத அறையில் வைத்து ஒரு திரியைக் கொழுத்தி வைக்கவும். கண் உள்ள தேங்காய் ஓடு அல்லது கொட்டாங்கச்சியால் அந்த திரியை மூடித் தேங்காயோட்டின் துவாரத்தின் வழியாய்ப் புகை வரவேண்டும். நோயாளியை ஒரு கம்பளிப் போர்வையால் மூடிப் புகை பிடிக்கவும். வத்தி ஆன பின் வேர்வையையெல்லாம் துடைத்து விட்டுக் காய்ச்சிய பசும்பால் $\frac{1}{4}$ படி சாப்பிடச் சொல்லவும். மூன்று நாள் வரை பால்சாதந்தான் சாப்பிடவேண்டும். நான்காம்நாள் நீர் முள்ளிச்ச மூலம் நீரில் போட்டுக் காய்ச்சி ஓமம் அரைத்துத் தேய்த்துக்கொண்டு அந்த நீரில் ஸ்நானம் செய்யவும். 1 முதல் 3 நாட்கள் புகை காட்டலாம். **தீரும் நோய்கள்** :— *பீனிசங்கள், பிளவை, புற்று, கண்டமாலை, கன்னப்புற்று, லிங்கப்புற்று, மார்பிளவை, கொருக்கு புண், அரையாப்பு, பவுத்திரங்கள், வெடிசூலை, தவளைச்சொறி முதலிய சகல புண்களும் தீரும்.*

குறிப்பு :- இம்மாதிரி புகைப்பிரயோகம் செய்யும் போது சில தேகிகட்கு வாய் கொஞ்சம் பிடிப்பு ஏற்படுகிறது (Mercurialism). சில தேகிகட்கு

வாய் பிடிக்கிறதில்லை. **நோய் வெகு விரைவில் குண மாகிறது.** புகைப்பிரயோகம் செய்யும்போது பல்வலி அல்லது ஈறு கொஞ்சம் தடிப்பு ஏற்படுவதாயிருந்தால், புகையை உடனே நிறுத்திவிட்டு அடியிற்கண்ட குடி நீரைத் தயார் செய்து வாய் கொப்பளிக்கவேண்டும்.

குடிநீர் விவரம்:

படிகாரம் – பலம் 2

கடுக்காய்த் தோல் – பலம் 1

கருவேலம்பட்டை – பலம் $\frac{1}{4}$

காசுக்கட்டி – பலம் $\frac{1}{4}$

மாசிக்காய் – பலம் $\frac{1}{4}$

இவைகளை இடித்து மண்பாண்டத்திலிட்டு $\frac{1}{2}$ படி நீர் விட்டுக் கொதிக்கவைத்து வடிகட்டி ஒரு நாளைக்கு 3, 4 வேளை வாய் கொப்பளிக்கவும். இவ்விதம் 2, 3 நாள்கள் செய்யக் குணமாகும். பல்லுக்கு யாதொரு கெடுதலுமில்லை. தேவையாயின் படிகார பற்பம், வெண்ணெய் பற்பம், அன்னபேதிச் செந்தூரம், அயச் செந்தூரம், படிக வெண்கார பற்பம் இவை போன்றவைகளை தக்க யளவில் வெண்ணெயில் குழைத்து காலை, மாலை மூன்று நாள் கள் கொடுக்க ரசவீறு தணிந்து வாய்ப்புண் ஆறிப் போம். (Glycerine Baracis or Mel - Boracis may be applied locally to the Buccal mucus – membrane for one or two days. Stomatitis will heal quite abight)

முடிவுரை.

புற்றுநோய் தீருவதற்கு இதுவரை கூறிவந்த பரிகார முறைகள் யாவும் சென்ற சில ஆண்டுகளாக எங்களது சித்த ஆராய்ச்சி நிலையத்திலும் அதற்கு முன்னும் எங்களது பரம்பரையில் அனுபவித்துவந்த சிறந்த பல சித்த நூல்களை ஆராய்ந்தறிந்து தயார் செய்து அனுபவித்து முடிவு தெரிந்தவைகளேயாகும். ஆரம்ப நிலையில் வந்த புற்றுநோய்கள் அனுகூலமடைந்திருக்கின்றன. நவீன மருத்துவத் துறையில் பரிசோதனை செய்து (including Biopsy) புற்றுநோய்களெனத் தீர்மானிக்கப்பட்டவைகளேயாகும். பெரும்பாலும் வாயிலுண்டாம் புற்று, ஆண்குறிப் புற்று இவை கூடுமான மட்டும் எளிதில் நமது சிகிச்சைக்கு வசமாகியது. மற்ற புற்றுநோய்கள் காலதாமதமாக நவீன முறையில் கைவிடப்பட்ட பிறகு வந்ததால் மருந்து உணவாதிகள் உட்கொள்ளுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. சிறந்த பரிகாரம் செய்ய லாயக்கில்லாது போய்விட்டன. எனினும் ஆராய்ச்சி மென்மேலும் நடைபெறுகின்றன.

பத்தியம் :- புற்றுநோயுண்டாகியிருக்கிறயிடம், நோயின் வன்மை, நோயினனின் உடல் வன்மை ஆகிய இவற்றைம் பொருத்தும், கொடுக்கும் மருந்தைப் பொருத்தும் உப்பு, புளி, புகை, போகம் இவை நீக்கி அவசியம்போல நல்ல சத்துடைய உணவாதிகளைக் கொடுத்துவருவது நல்லது.

சில பத்திரிகையில் கூறியுள்ள தோல்புற்றுக்கு வெளிப்பிரயோகமான முறைகளைக் கீழே காணலாம். ஆனால் அவை எவ்வளவுதூரம் பயனளிக்குமென்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியவரும். எனக்கு

அவற்றைப் பற்றிய அனுபவமில்லை. தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடான வைத்தியமுறைகளில் புற்றுநோய்கள் ரணங்கள் ஆறுவதற்கான முறைகளெனக் கூறியுள்ளார். (Vide தினமணி சுடர் அனுபந்தம் – 7–1968) :-

1. ஈரமான கொடிவேலி வேரைத் தண்ணீர் விட்டு ஒரு சந்தனக்கல்லில் கைபடாமல் இழைத்து சமம் கரும்புசர்க்கரை சேர்த்து ஒரு குச்சியால் குழைத்துப் புண்களில் போட புண்கள் ஆறுமெனக் கூறப்பட்டுள்ளது. இதனை என்னைப்போலொற்ற வைத்தியர் செய்யத்துணியார். புண்யில்லாத சருமத்தில் இதனைப் போட்டவுடனேயே தாங்கொணுத எரிவும் கொப்பளமும் உண்டாகி நோயாளித் துடியாய்த் துடிப்பான். ஒருக்கால் இதனைப் பரீட்சை பார்க்க நேரிடின், எரிவுகண்ட நிமிடமே பற்றை நீக்கி பசுவெண்ணெயைக் கனமாய் போடவும்.

2. சாதிக்காயை (ஒரு இரும்புக் கம்பியில் சொருகி விளக்கெண்ணெய் விளக்கில்) சுட்டு நல்லெண்ணெயில் குழைத்து, புற்றின்மேல் பற்றுப் போடக் குணமுண்டாகும். (புற்று என்பது அவ்வளவு சுலபத்தில் தீராது).

3. எலிப்புழுக்கையை கோமூத்திரத்தினுல் அரைத்து, புற்றுகளின்மேலே தடவ அவை தளரும். (இது எந்த வகைப் புற்றுக்கென்பது புரியவில்லை. அவ்வளவு சுலபமுமல்ல).

4. அதிமதுரத்தைத் தேனிலிழைத்து மேலே பூசினுலும் குணமுண்டாகும். (புற்று என்பது இன்னதென அறியாதவர்கள்தான் இதனைக் கூறலாம். அவ்வளவு சுலபமல்ல).

5. திப்பிலியை பருத்திக் காய்ச் சாற்றில் அரைத்துப் போட்டாலும் புற்றுகள் தீரும். (அவ்வளவு சுலபமல்ல).

6. வசம்பு, சுக்கு, வெள்ளைப்பூண்டு இம்மூன்றையும் சம எடை எடுத்து அதற்கு நேர் எடை சிற்றுமணக்குவேர்ப் பட்டையையும் சேர்த்து கல்லுரலிலிட்டு நசுக்கித் தினந்தோறும் வாய்ப்புற்றின்மேல் வைத்துக் கட்டிவந்தாலும் ஆறிவிடும். (வாய்க்குள் இருக்கப்பட்ட புற்றுக்கு மருந்து எவ்விதம் வைத்து கட்டுவதென்பது புரியவில்லை. ஒருக்கால் கன்னப் புற்றுக்குப் பிரயோகிப்பதாகயிருக்கலாம். அதுவும் அவ்வளவு எளிதில் வசப்படாது).

புற்றுநோய் என்பது மிகவும் சிக்கலான கொடிய நோய். It is a deadly malignant disease. வார்த்தையளவில் இலகு வாய்ப்பேசக்கூடியதல்ல. நம் முன்னோர்களாகிய சித்தர்கள், ரிஷிகள், அவர்களது தபோமகிமையாலும் ஞானக்கண் தோற்றத்தாலும் தீராப்பிணிகளனைத்தும் தீரும்படிக்கான பரிகாரமுறைகளைக்கூறும் பண்டைய காலத்து சித்த வயித்திய நூல்கள் தமிழ்நாட்டில் சிதறுண்டு கிடக்கின்றன. எல்லா நூல்களையும் வயித்தியர்களாகிய நாம் பார்த்து முடித்ததாகச் சொல்ல முடியாது. புதைந்துகிடக்கும் அற்புதமான சிறந்த மேன்மையான பரிகார முறைகளை வெளிக்கொணர சித்தர்களது நூல்களை அனுபவமிகுந்த நிபுணர்களைக் கொண்டு ஆர்வமிகுந்த ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டும். புற்றுநோய்க்கு சித்த ஆராய்ச்சி இன்றியமையாதது. "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்". "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்". புற்றுநோய் ஆராய்ச்சிக்குச் செய்யும் முயற்சி வீண்போகாது, இது திண்ணம்.

"It is said that nature will divulge its secrets to those scholars who do intensive study and research into all the above Phenomina of Puttru". Therefore it is very imperative that all of us should encourage the spirit of researeh among the practitioners of Siddha Medicine and Provide Ample Facilities for the same.

May god save the mankind from this Dreadful Disease.




Zulaha Bivi MH. 65 F.
Cancer - Mouth, Throat and Lip.
2 Years duration - Complete cure after
3 months treatment (1970)




Pathumma Bivi MH. 50 F.
Cancer Tongue and Throat - $1\frac{1}{2}$ Years duration - with Glandular Enlargements - Progressing (23—1—71)



Mrs. Santhakumari H. 18 F.
Naso - Pharyngeal Carcinoma - Two years duration - Complete recovery - (1969)



Mr. Narayanan Nair
Cancer Tongue, Throat and cheeks advanced stage with metas - Tasis to the Neck & Ear.
Fairly responded to treatment.
Photo taken when it is Healing.



Chinnakuttan Nair H. 55 M.
Cancer Mouth, Lip and chin -
1 Year duration Feb. 1971 - Progressing well.



Ramaswami H. 55 M.
Cancer right cheek and Lip.
I Year duration 1969 - Progressing.



Vadivelu H. 56 M.
Cancer cheek right and Lip.
8 Months duration - Progressing 1970.